## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - புதுக்கோட்டை மாவட்டம்
## ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிட இணையதள அறிவிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் (அரசுத் தலைப்பு) ஈப்பு ஓட்டுநர் பணிநிலையில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

<table>
<tr><td>1</td><td>பதவியின் பெயர்</td><td>:</td><td>ஈப்பு ஓட்டுநர்</td></tr>
<tr><td>2</td><td>மொத்த காலிப்பணியிடங்கள்</td><td>:</td><td>2</td></tr>
<tr><td>3</td><td>ஊதியம்</td><td>:</td><td>ரூ.19500-71900 (Level 8)என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்த இதர படிகளுடன்</td></tr>
<tr><td>4</td><td>இனச் சுழற்சி எண் மற்றும் இட ஒதுக்கீடு விவரங்கள்</td><td>:</td><td>
<table>
<tr><td>இன சுழற்சி எண்</td><td>இன சுழற்சி விவரம்</td><td>முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமையற்றவர்</td></tr>
<tr><td>14</td><td>பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்கள்தவிர)</td><td>முன்னுரிமையற்றவர்</td></tr>
<tr><td>15</td><td>பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்கள்)</td><td>முன்னுரிமை பெற்றவர்</td></tr>
</table>
</td></tr>
<tr><td>5</td><td>வயது வரம்பு</td><td>:</td><td>
<table>
<tr><td>பிரிவு</td><td>குறைந்தபட்ச வயது வரம்பு</td><td>நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு</td></tr>
<tr><td>பிற்படுத்தப்பட்டோர்</td><td>18</td><td>34</td></tr>
<tr><td>ஆதரவற்ற விதவை</td><td>18</td><td>37</td></tr>
<tr><td>மாற்றுத் திறனாளி</td><td>18</td><td>ஒவ்வொரு பிரிவினருக்கும் நிர்ணயிக்கப்பட்ட உச்சபட்ச வயது வரம்பில் கூடுதலாக 10 ஆண்டுகள்</td></tr>
<tr><td>முன்னாள் ராணுவத்தினர்</td><td>18</td><td>GT- 50 years & BC/MBC/SC/ST-55 years</td></tr>
</table>
01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். மேற்கண்ட தேதியில் அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது.
</td></tr>
<tr><td>6</td><td>கல்வித் தகுதி</td><td>:</td><td>8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்</td></tr>
<tr><td>7</td><td>இதரத் தகுதிகள்</td><td>:</td><td>1.செல்லத்தக்க இலகுரக/ கனரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.<br>2.வாகனம் ஓட்டுவதில் 5 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.</td></tr>
<tr><td>8</td><td>விண்ணப்ப படிவம்</td><td>:</td><td>மாதிரி விண்ணப்ப படிவம் https://pudukkottai.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.</td></tr>
<tr><td>9</td><td>விண்ணப்ப காலம்</td><td>:</td><td>31.01.2024 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிவரை</td></tr>
<tr><td>10</td><td>விண்ணப்பிக்க கடைசி நாள்</td><td>:</td><td>31.01.2024 மாலை 5.45</td></tr>
<tr><td>11</td><td>விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி</td><td>:</td><td>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை- 622 005.</td></tr>
</table>

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர் தங்களின் விண்ணப்பத்தினை வெள்ளைத் தாளில் அல்லது இணையதள விண்ணப்ப படிவத்தில் புகைப்படத்துடன் பெயர், முகவரி, சாதிச் சான்று, கல்வித்தகுதிக்கான சான்று, மாற்றுச் சான்றிதழ், தமிழ்வழிச் சான்று (1 முதல் 8ஆம் வகுப்பு வரை), கொரோனா நோய் தொற்று மற்றும் இதர காரணங்களினால் பெற்றோரை (இருவரையும்) இழந்ததற்கான வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட சான்று ஆகிய விவரங்களுடன் அனுப்ப வேண்டும்.
2. இதற்கென விண்ணப்பப் படிவம் ஏதும் தனியே வழங்கப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்கள் எட்டாம் வகுப்பு தேர்ச்சிக்கான கல்வித்தகுதி அல்லது உயர்கல்வித்தகுதி பெற்றிருப்பின் அதன் நகல் மற்றும் வயது வரம்பில் சலுகை தேவைப்படின் அரசு விதிமுறைகளின்படி அதற்குரிய சான்றின் நகலினையும் சுயசான்றொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. நடப்பில் செல்லத்தக்க இலகுரக / கனரக வாகன ஓட்டுநர் உரிம அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
5. முன் அனுபவத்தினை பொறுத்தவரையில், பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து உரிய நிலையில் உள்ள அலுவலரால் அளிக்கப்பட்ட சான்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
6. பரிசீலனையின்போது விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
7. அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை விண்ணப்பங்கள் பெறப்படும்.
8. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் உறை-1 (10 x 4 inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
9. விண்ணப்பங்களை 31.01.2024 அன்று மாலை 5.45 மணிக்குள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), வளர்ச்சிப் பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை- 622 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
10. தேவையான இனசுழற்சி, வயது மற்றும் கல்வித்தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
11. குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
12. அஞ்சலக தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.
13. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
14. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
15. நேர்காணல் அழைப்புக் கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு என்று கருதக்கூடாது.
16. நேர்காணல் அழைப்பு தகுதியான விணணப்பதாரர்களுக்கு மட்டும் தனியாக அனுப்பப்படும்.
17. தேர்வுக்கு வரும் நபர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
18. கூடுதல் விவரங்களுக்கு https://pudukkottai.nic.in என்ற இணையதள முகவரியை காண்க.

ஒம்/-ஐ.சா.மெர்சி ரம்யா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.

/உத்தரவின்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.